(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

CNR.No.TNNM080021622019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW.5

| | | |
|---|---|---|
| Name | : | மோகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 01.10.2021

முதல் விசாரணை:

நான் ரங்கம்பாளையத்தில் குடியிருக்கிறேன். RO Service செய்யும் வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரை உள்ளவர்களைத் தெரியும். ஆஜர் எதிரி மகேந்திரனைத் தெரியும். எதிரி கண்ணியப்பனைத் தெரியும், பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். 27.10.2018 ம் தேதி காலை சுமார் 10.15 மணியளவில் கிழக்கு ரத வீதியில் உள்ள இடத்தை அளப்பதற்கு சர்வேயர் வருவதாகவும் உதவிக்கு வருமாறு என்னையும் கோபாலையும் அ.சா.1 கணேசன் அழைத்தார். நாங்கள் மேற்படி இடத்திற்கு சென்றபோது எதிரிகள் மகேந்திரனும் கண்ணியப்பனும் அங்கிருந்தார்கள். அவர்கள் இடத்தை அளப்பதற்கு முடியாது என்று சொல்லி பிரச்சினை செய்து மகேந்திரன் கெட்ட வார்த்தையால் திட்டி அருவாளை எடுத்து கணேசனை வெட்ட வந்தார். நானும் கோபாலும் அங்கிருந்தவர்களும் மகேந்திரனைத் தடுத்தோம். சிறிது நேரத்தில் சர்வேயர் வந்தார். அவரையும் இடத்தை அளக்க விடாமல் மகேந்திரன் பிரச்சினை செய்தார். அ.சா.4. ரமேஸ் அதை வீடியோ எடுத்தபோது அவரையும் தள்ளி விட்டார்கள். நீங்க எங்க வேண்டுமானாலும் போங்கள் யாரை வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி பிரச்சினை செய்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

சம்பவம் என்று நடந்தது என்றால் 27.10.2018. நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவம் 30.10.2018 ல் நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் அது Printing Mistake. அ.சா.1 க்கும் எனக்கும் என்ன உறவு என்றால் எனது ஓனருடைய மாமனார். 161 குவிமுச

வாக்குமூலத்தில் ஓனருடைய மாமனார் என்று சொல்லியுள்ளேனா அல்லது நண்பர் என்று சொல்லியுள்ளேனா என்றால் நண்பர் என்று சொல்லியுள்ளேன். அதுவும் printing mistake ஆ என்றால் இல்லை. எனது ஓனருடைய பெயர் என்னவென்றால் ரவீந்திரன். எனவே ரவீந்திரனின் மனைவிக்கும் இந்த சொத்தில் பங்குள்ளது என்றால் சரிதான். என்னை ரவீந்திரன் அழைத்தாரா கணேசன் அழைத்தாரா என்றால் கணேசன் அழைத்தார், எப்போது அழைத்தார் என்றால் நான் ஒருவாரம் முன்பு அவரது வீட்டிற்கு சென்றிருந்தேன் அப்போது அழைத்தார். அரிவாள் மகேந்திரன் கையில் வைத்திருந்தாரா என்றால் அருகிலுள்ள பழக்கடையில் வைத்திருந்தார். பழக்கடை திறந்திருந்ததா என்றால் திறந்திருந்தது. சர்வேயர் போலிசார் வரும்போது மகேந்திரன் கையில் அருவாள் இருந்ததா என்றால் இல்லை, அவருடன் இருந்தவர்கள் வாங்கி வைத்துவிட்டார்கள். போலிசார் வந்த போது மகேந்திரன் அருவாளை எடுத்து வெட்ட வந்ததாக கணேசன் போலிசாரிடம் சொன்னாரா என்றால் சொன்னார். போலிசார் மகேந்திரனை வார்ன் செய்தார்கள். அருவாளை எடுத்து வெட்ட வந்ததாக சொன்னபோது மகேந்திரனை போலிசார் உடனடியாக கைது செய்யவில்லையா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற போது அந்த கட்டிடத்தின் கதவு ஜன்னல் ஏதாவது சேதமடைந்திருந்ததா என்றால் இல்லை நன்றாகத்தான் இருந்தது. அந்த சமயத்தில் அ.சா.1 எங்களுடன் இருந்தாரா என்றால் இருந்தார். அ.சா.4. ரமேஸ் என்ன வீடியோ எடுத்தார் என்றால் சம்பவம் நடந்ததை வீடியோவாக எடுத்தார். அவரை யார் தள்ளிவிட்டார் என்றால் மகேந்திரன் தள்ளிவிட்டார். அவரைத் தள்ளிவிடும்போது போலிசார் அங்கிருந்தார்களா என்றால் சம்பவத்திற்கு பிறகுதான் போலிசார் அங்கு வந்தார்கள். அன்றையை தினம் கட்டிடத்தை அளந்து முடித்துவிட்டார்களா என்றால் அளந்து முடித்தார்கள். எனது ஓனருக்கு ஆதாயம் ஏற்படுத்துவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை. இல்லை